நிர்மாணவேலை உத்தரவாத நிதியம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாணவேலை உத்தரவாத நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1999 ஆகஸ்ட் 05 திகதிய நிர்மாணவேலை உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு உறுதியின் 11(ஈ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

உரிய நியமத்துடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பரிமாரப்படாத கொடுக்கல் வாங்கல்களின் மூலமான வருாவாய்கள் (வரி மற்றும் சாட்டுதல்கள்) நியமத்தின் பின்னிணைப்பின் படி பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணவேலை உத்தரவாத கம்பனியில் (Construction Industry Guarantee Fund Limited) இருந்து கிடைத்திருந்த மானியங்கள் ரூபா 0.98 மில்லியன் தொகை நிதியத்தின் திரண்ட மிகை / பற்றாக்குறையின் கீழ் மூலதன மானியம் என சரியாக சமர்ப்பித்திருக்கவில்லை.	சுட்டிக்காட்டியப டி மூலதன மானியம், திரண்ட மிகை / பற்றாக்குறையின் கீழ் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்கு மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிணைமுறித் தொகை கேள்விகளுக்கான (Demands) நிதியத்தினால் 2023 ஆண்டின் போது வாடிக்கையாளர் ஒருவருக்கு செலுத்தி செலவு என கணக்கீடு செய்திருந்த ரூபா 0.19 மில்லியன் தொகை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரினால் 2024 ஆண்டில் மீண்டும் செலுத்தப்பட்டிருந்தது. இந்த திருப்பிப் பெறல் திரண்ட இலாபத்திற்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு பதிலாக நிகழத்தக்க பொறுப்புக்களுக்கான ஒதுக்கக் கணக்கு (Contingent Liability Reserve) இற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.	சுட்டிக்காட்டியுள்ள தொகை 2023 ஆண்டில் வாடிக்கையாளர் ஒருவருக்கு பிணைமுறியொன்றை காசாக்குவதற்காக செலுத்திய பின்னர் அந்தத் தொகை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரினால் 2024 ஆண்டில் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எதிர் காலத்தில் கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பிணைமுறிப் பணக் கேள்வி மீண்டும் பெறும் போது சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	கடந்த ஆண்டின் போது முற்கொடுப்பனவு ரூபா 0.42 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலவுகள் என இனங்காணாமல் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால், நடைமுறைச் சொத்துக்கள் அந்தப் பெறுமதியினால் மிகை கணிப்பு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட செலவு அந்த எண்ணிக்கையினால் குறைக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	அடுத்த நிதியாண்டில் முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.	முன்னைய ஆண்டின் முற்கொடுப்பனவுப் பெறுமதி கணக்கீடு செய்யும் தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2018 ஜூன் 05 திகதி முதல் 2023 செப்தம்பர் 08 திகதி வரை கடன்பட்டோர்களினால் நிதியத்தின் 05 வங்கிக் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1.88 மில்லியன் தொடர்பாக கடன்பட்டோர்களை இனங்கண்டு அந்தக் கணக்குகளுக்கு சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நடைமுறை பொறுப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதியத்தின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பெறுப்புக்கள் அந்த எண்ணிக்கையினால் மிகை கணப்பீடு ஏற்பட்டிருந்தது.	கடந்த பல ஆண்டுகளாக நாட்டில் உருவாகிய நிலைமை காரணமாக அடிக்கடி ஒப்பந்தக்காரரின் பிணைமுறிக் கட்டணம் அல்லது வேறேனும் பணமொன்று வைப்புச் செய்த பின்னர் எங்களுக்கு உரிய சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்படாத காரணத்தினால் இனங்காண முடியாத நிலைமையொன்று காணப்பட்டது. உரிய முறையில் அந்த மீதிகளை இனங்காணும் வரை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்புச் செய்வதை இனங்காண்பதற்காக பொருத்தமான செய்முறையொன்றை அறிமுகப்படுத்தி தாமதமின்றி குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா மில்லியன்	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	செலுத்த வேண்டிய செயற்திட்ட மீதிகள் (Payable balance for RRP/RDA projects)	157.83	மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்	கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்திக்கொள்வதற்குரிய ஒப்பந்தக்காரர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அனேகமான ஒப்பந்தக்காரர்கள் இதுவரை பதிலனுப்பியிருக்கவில்லை.	செலுத்த வேண்டிய செயற்திட்ட மீதிகளை கால ரீதியாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கடன் பட்டோர்கள்	7.62	மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள்	கணக்கீடு மற்றும் கணக்காய்வு அலுவல்கள் செய்முறையின் பகுதியொன்றாக எம்மால் இறுதிக் கடன்பட்டோர் / கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்குரிய ஒப்பந்தக்காரர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அனேகமான ஒப்பந்தக்காரர்கள் இதுவரை பதிலனுப்பியிருக்கவில்லை.	ஆக்கபூர்வமான செய்முறையொன்று கடைபிடித்து கடன் பட்டோர் / கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியத்தினால் நிர்மாண வேலைக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு பிணைமுறி வழங்கப்படுவதுடன், ஒப்பந்தக்காரரின் செயலாற்றல் குறைவடைந்த சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர் பிணைமுறியின் பணத்தை நிதியத்திலிருந்து விண்ணப்பிப்பதனால் 2011 முதல் 2019 ஆண்டு வரை 22 சந்தர்ப்பங்களில் அவ்வாறு ரூபா 87.65 மில்லியன் தொகையொன்று வாடிக்கையாளருக்கு செலுத்தியிருந்ததுடன், அவற்றில் ரூபா 4.68 மில்லியன் அறவிட முடியாமல் 2019 ஆண்டில் நம்பிக்கை பொறுப்புச் சபை அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், 2020 முதல் 2023 வரை வாடிக்கையாளருக்கு செலுத்தப்பட்டு	100% ஆபத்து நிலையொன்றுடன் பிணைமுறியொன்று வழங்கிய பின்னர் ஒப்பந்தக்காரர்கள் அந்த பொறுப்புக்களை புறக்கணிப்பதன் மூலம் ரூபா 102 மில்லியன் தொகை செலுத்துவதற்கு நேரிட்டிருந்தவுடன், அறவீடு செய்வதற்காக சட்ட அலுவல்களுக்காக மேலும் மேலதிகமாக ரூபா 8 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்ட போதிலும், அறவீடு செய்ய முடியாமல் போனது. ஒப்பந்தக்காரர்களின் தவறான நடத்தை (Code of Ethics) இதற்கு பிரதான காரணமாக இருந்தது.	ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றுகை மற்றும் நடத்தையை அபிவிருத்தி செய்துகொள்வதற்காக நிர்மாண வேலைகளுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு கவனம் செலுத்துதல் மற்றும் பணத்தை அறவீடு செய்ய முடியாத சந்தர்ப்பங்கள் தொடர்பாக செய்முறை சார் வேலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தி ஆபத்து நிலையை குறைத்துக்கொள்வதற்கு மற்றும் பெற வேண்டிய மீதியை அறவீடு செய்து கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 56.83 மில்லியன் தொகை காணப்பட்டது. மேலும், 2024 ஆண்டின் போது ரூபா 31.80 மில்லியன் தொகை பிணைமுறி காசாக்குவதற்கு நிதியத்திற்கு நேரிட்டிருந்தது.		
(ஆ)	நிதியத்தினால் பிணைமுறி பணத்துக்காக பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு செலுத்தி ஒப்பந்தக்காரர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 68.70 மில்லியன் தொகை 2024 ஆண்டின் போது நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன், ஆபத்து நிலைக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து (Contingent Liability Reserve) பதிவழிக்கப்பட்டு (write off) இருந்தது. இந்தத் தொகையில் 2024 ஆண்டிற்கு முன்னர் இருந்து அறிவிடப்பட வேண்டியிருந்த ரூபா 51.90 மில்லியன் தொகையும், 2024 ஆண்டு பிணைமுறியை காசாக்குவதற்காக செலுத்தியிருந்த ரூபா 16.80 மில்லியன் தொகையும் அடங்கியிருந்தது. அதன்படி, வாடிக்கையாளர்களுக்கு நிதியத்தினால் செலுத்தியிருந்த கூட்டுத்தொகை ரூபா 102.90 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் மீண்டும் நிதியத்திற்கு அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. இது தொடர்பாக நடுத்தீர்ப்பு உட்பட சட்டச் செயற்பாடுகளில் தீர்ப்பு நிதியத்திற்கு அனுகூலமாக கிடைத்திருந்த போதிலும், குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்ய முடியாமல் இருந்ததுடன், இது தொடர்பாக சட்ட அலுவல்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3.19 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.	பிணைமுறிகளை காசாக்கிய பின்னர் பல வருடங்கள் கொடுப்பனவுகள் மீளளிப்புச் செய்வதை தட்டிக் கழித்திருந்ததனால் அடிக்கடி பலவீனங்களின் காரணமாக ஆபத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்வதற்கு நம்பிக்கை பொறுப்புச் சபை ஏகமனதாக தீர்மானம் எடுத்ததுடன், பிணைமுறி காசாக்குவதன் மூலம் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்தவற்காக முயற்சியொன்று எடுக்கப்பட்ட போதிலும், கணிசமான தொகையொன்று செலவிட நேரிட்டிருந்தது.	- மேற்படி -
(இ)	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறிகளில் இருந்து பெற வேண்டிய தேறிய வருமானம் ரூபா 7.62 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், இந்த மீதியில் 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 4.69 மில்லியன் தொகையும், 03	தாமதமடைந்த போதிலும், அறவீடு செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையால் எப்போதேனும், கடனை தீர்த்துக்கொள்ள முடியும் என கருத்துடன் உள்ளேன்.	ஒப்பந்தமுறிகள் மற்றும் பிணைமுறிகளில் இருந்து பெறவேண்டிய வருமானம் கால ரீதியாக அறவீடு செய்வதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிலுவை மீதிகள் தொடர்பாக

	வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 2.41 மில்லியன் தொகையும், 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 0.30 மில்லியன் தொகையும் அடங்கியிருந்தது. நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த இந்த மீதிகளை அறவீடு செய்தல் நிச்சமற்ற தன்மையொன்று காணப்படுகின்றதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.		விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	நிதியத்திற்கு அரச அபிவிருத்தி நிர்மாண வேலைகள் கூட்டுத்தாபனம் (State Development & Construction Corporation) இலிருந்து 2012 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 20.80 மில்லியனிற்கான கடன்தொகை நிதியத்தின் நிதித் தரப்படுத்துதலுக்காக பாதகமாக தாக்கத்தை ஏற்படுத்துவதனால் அறவிடப்பட வேண்டிய மீதியொன்றென நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு பதிலாக நம்பிக்கை பொறுப்பாளர்களின் அங்கீகாரத்துடன், 2015 ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இந்த மீதி நிதியத்துக்கு செலுத்த வேண்டிய மீதியொன்றென காட்டப்பட்டிருந்தது. அதன்படி, அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	நிறுவனத்தின் கொள்கைசார் தீர்மானத்திற்கு நம்பிக்கைப் பொறுப்பாளரினால் எடுக்கப்படுவதுடன், நிறுவனத்திற்கு கேடு விளைக்கக்கூடியமையால் வழங்கியிருந்த அறிவுரைகளின் படி பதிவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை காணப்படின், ஏனைய வருமானம் ஒன்றென கணக்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.	பெற வேண்டிய மீதிகளை அறவிடு செய்வதற்காக இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுத்த பின்னர் அறவிடப்படாவிடின் மாத்திரம் அந்த மீதிகளை பதிவழித்தல் 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை 01/2021 மற்றும் 2023 மே 16 திகதி அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/01/2021(i) இற்கு இணங்க மேற்கொள்ள வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	100,000 கிலோமீற்றரிற்கான கிராமியப் பாதை செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்திருந்த 310 ஒப்பந்தக்காரர்களின் சான்றுபடுத்தப்பட்ட பில்பத்திரங்கள் செலுத்துவதற்காக போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள்	இரு தரப்புகளின் கொடுக்கல் வாங்கல்களின் போது ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் பிணைமுறி நிபந்தனைகளுக்கு புறம்பான விடயங்களின் காரணமாக 2025 ஏப்ரல் வரையும் பிணையாளர் என நிதியத்திற்கு பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தது.	ஒப்பந்தக்காரர்களின் சான்றுபடுத்தப்பட்ட பில்பத்திரங்களை கொடுப்பனவு செய்வதற்காக விடுவிக்கப்பட்டிருந்த பணம் நியாயமான காலத்தினுள் சிக்கல்களை தீர்த்துக்கொண்ட பின்னர் குறிப்பிட்ட

	அமைச்சினால் 2020 முதல் 2024 ஆண்டு வரை ரூபா 35,080.23 மில்லியன் தொகை வழங்கியருந்துடன், அவற்றின் ரூபா 34,449.18 மில்லியன் தொகை மாத்திரம் ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. செலுத்தப்படாத பணத்தின் ரூபா 157.83 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியத்தினால் வழியில் பணம் (Transits Money) கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இவற்றில் ரூபா 64.57 மில்லியன் தொகை 01 - 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதலும், ரூபா 19.23 மில்லியன் தொகை 03 - 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதலும் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் அடங்கியுள்ள முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த 105 செயற்திட்டங்களுக்கு உரிய ரூபா 51.92 மில்லியன் தொகையும் ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.	வாடிக்கையாளர் கணக்கு முறையில் வழுக்கல் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பின் முறிவு காரணமாக ஏற்பட்டிருந்த சேதத்தை தீர்த்துக்கொள்ளும் சிக்கலான தன்மையொன்று காரணமாக நிதியம் ஆபத்து நிலைக்கு ஆளாகிய ஒப்பந்தக்காரர் சிலரின் பணத்தை தடுத்துக்கொள்ளலை தவிர்த்துக்கொள்ள முடியாமல் இருந்தது.	ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவிப்பதற்காக வேறு பல்வேறு தரப்பினர்களினால் நிதியத்திற்கு வழங்கியிருந்த பணத்திலிருந்து 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு தீர்த்திருக்காத தொகை ரூபா 41.69 மில்லியன் தொகையாகும் இந்த மீதியிலிருந்து கூட்டுத்தொகை ரூபா 2.22 மில்லியன் தொகை மற்றும் ரூபா 14.81 மில்லியன் தொகை முறையே 01 - 03 வருடங்களும் இடைப்பட்ட மற்றும் 03 - 05 வருடங்களுக்கும் இடைப்பட்டிருந்ததுடன் ரூபா 2.25 மில்லியன் தொகை 05 வருடங்களுக்கு மிகையான கால வீச்சில் காணப்பட்டதுடன், குறிப்பிட்ட செயற்திட்டங்களின் தற்போதைய செயலாற்றுகை போதியளவாக காணப்படாமையால் வாடிக்கையாளர்களினால் வழங்கியிருந்த பணம் வழியில் பணம் என நீண்ட காலமாக நிதியத்தில் தடுத்து வைத்திருப்பதன் மூலம் நிதியத்தின் பொறுப்பு அதிகரித்திருப்பதனால் அந்த பொறுப்பினை தீர்க்கும் ஆபத்து	ஆபத்து நிலை மற்றும் பொறுப்புக்கள் முடிவடைந்த பின்னர் தடுத்து வைத்தல் பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	- மேற்படி -

	நிலை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.		
(இ)	ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறிகளில் இருந்து ஒப்பந்தக்காரர்களிடம் மிகையாக அறவீடு செய்யப்பட்டு நிதியத்தினால் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய 03 வருடங்களுக்கும் 05 இற்கும் இடைப்பட்ட ரூபா 3.40 மில்லியனிற்கான செலவு மீதியொன்று கடன்கொடுத்தோரின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும், இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	செலவு மீதிகளிலிருந்து சுமார் 80% எண்ணிக்கையொன்று தற்போது விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பொறுப்புக்கள் முடிவடைந்த பின்னர் மீதித்தொகையையும் விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	கூடுதலாக பணம் வைப்புச் செய்துள்ள ஒப்பந்தக்காரர்களை இனங்கண்டு அந்தப் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், நிதி நிலைமைக்கூற்றில் சரியான மற்றும் நியாயமான நிலைமையொன்று பணயப் பொருளாளர்களுக்கும் (Stake Holders) காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு		இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆகஸ்ட் 08 திகதிய 2024 இன் 44 ஆம் இலக்கம் கொண்ட அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் பகுதி VIII பிரிவு 39 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றிக்கையின் மூலம் வெளியிடப்பட்டிருந்த நிதிப் பிரமாணம் 876(3)	இந்தச் சட்டம் செயற்படுதல் ஆரம்பத் தினத்தில் இருந்து ஏதேனும், நியதிச் சட்டம் சாராத நிதியம் ஒன்று அவற்றின் செயற்பாடுகளை முடிவுறுத்த வேண்டியதுடன், இந்தச் சட்டம் செயற்படும் நாள் முதல் ஒரு வருடத்தினுள் அந்த நிதியத்தை கலைக்க வேண்டும். அவ்வாறாயினும் அந்த நிதியம் தொடர்ந்து பேணிச் செல்ல வேண்டும் என திறைச்சேரி செயலாளரிடம் வினவி நிதியமைச்சரினால் தீர்மானம் ஒன்று எடுக்கப்படின் அந்த நிதியம் நியதிச் சட்ட நிதியமொன்றாக மாற்றுவதற்கு முடியும் எனினும், 2025 ஏப்ரல் 30 திகதி அளவிலும் நிதியம் அதற்கு இணங்கி சட்ட முறைப்படி இருக்கவில்லை.	நிதியத்தின் கட்டமைப்பு மற்றும் தேவைப்பாடு தொடர்பாக 2024 மற்றும் 2025 ஆண்டு முதல் அறையாண்டுகளில் திறைச்சேரியின் பிரதிச் செயலாளரின் மற்றும் பணிப்பாளர் நாயகம் (அரச நிதி) பல கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், 25 வருடங்களாக திரண்ட நிதியத்திற்கு தாக்கமொன்று ஏற்படுத்தாமல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட சேவையை மதிப்பாய்வு செய்யும் போது அரசாங்கத்திற்கு மாதிரியான நிதியம் ஒன்றாக பேணிச் செல்லல் தொடர்பாக பதிவு செய்வதற்கும், நியதிச் சட்ட நிதியம் ஒன்றென பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் நிறுவும் தேவைப்பாடு அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் முக்கியத்துவம் வழங்குவதற்காக உறுதிப்படுத்தப்பட்டது. இங்கு சர்வதேச நிதி மதிப்பாய்வு நிறுவனம்	குறிப்பிட்ட சட்டம் மற்றும சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு காணப்படாத சந்தர்ப்பங்களுக்க ாக சட்டத்தின் பிரகாரம் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

			ஒன்றாகிய பிச் ரேடின் நிறுவனத்தின் (Fitch Ratings) 2018 ஆண்டு முதல் தொடந்தியங்கும் தன்மை (BB ஆக்கபூர்வமான) விஷேட கவனத்திற்கு உள்ளாகி நிறுவனத்தின் நிதி வலு மற்றும் நிரந்தரத் தன்மை உறுதியாக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	1999 ஆகஸ்ட் 05 திகதிய நிர்மாண வேலை உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு உறுதியின் பிரிவு 09(ஊ)	நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு சம்பளங்கள் மற்றும் படிகள் அல்லது கௌரவச் சம்பளம் பெற்றுக்கொள்ளும் உரிமை காணப்படாத போதிலும் அவர்களின் கடமைகள் நிறைவேற்றும் போது மேற்கொள்ளும் செலவுகளை மீளளிப்பு செய்ய முடியும். அதற்கு முரணாக, நிதியத்தினால் சபையினால் திரண் தொழில் இயலுமை மீது மேலதிக சேவைகளில் ஈடுபடுதல் என கடமைகளை நிறைவேற்றுவதற்காக மாதாந்தம் ரூபா 50,000 தொகை வீதம் நிலையான தொகையொன்று என கூட்டுத்தொகை ரூபா 2.50 மில்லியன் தொகை, ரூபா 2.30 மில்லியன் தொகை, ரூபா 2.50 மில்லியன் தொகை மற்றும் ரூபா 3.00 மில்லியன் தொகை முறையே 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நம்பிக்கை பொறுப்புச் சபையினால் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.	நம்பிக்கை பொறுப்புச் சபை அவர்களின் மாதாந்த செயலாற்றுகைக்காக மாத்திரம் முன்னர் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்று மாதாந்தம் மீளளிப்பு செய்யப்படுகின்றது. இங்கு அவர்களின் செயலாற்றுகையை உறுதிப்படுத்துவதற்காக பெயர்ப் பதிவேடொன்றில் கையொப்பமிடப்படுவதுடன், அது உண்மையாகவே அவர்களின் வரவினை உறுதிப்படுத்துவதற்காக அல்ல என குறிப்பிடப்பட வேண்டும். நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் 9(எப்) கீழ் பதவிக்குரிய பொறுப்புக்களின் மூலம் அந்த நிர்மாண வேலை உத்தரவாத நிதியத்தின் முன்னேற்றம் மற்றும் அன்றாட செயற்பாடுகளுக்கு பாதகமான விடயங்கள் தொடர்பான தொடர்ச்சியான மீளாய்வுக்கு ஆளாக்கப்படுகின்றது.	நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு காணப்படாத சந்தர்ப்பங்களில் அதற்கான அங்கீகாரங்கள் பெற்றுக்கொண்டு உரிய ஆவணங்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(ஆ)	நிதியத்திற்காக நியதிச்சட்ட ஏற்பாடுகளின் படி பெறப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் அல்லது நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் கீழ் கிடைக்கின்ற அதிகாரம் ஒன்றின்றி நிதியத்தின் செலவுகள் ஏதும் மேற்கொள்ளக்கூடாது எனினும், நிதியத்தினால் திறைச்சேரியின் அங்கீகாரம் ஒன்றின்றி 14 வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தப் போக்குவரத்துப் படி என நிலையான தொகையொன்று அதாவது மாதாந்தம் கூட்டுத்தொகை ரூபா 211,500 தொகை வீதம் ஆண்டின் போது மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 2.54 மில்லியன் தொகையும் ஊழியர்களுக்காக ஆண்டின் போது ரூபா 1.71 மில்லியன் தொகையும் போக்குவரத்துப் படி என செலுத்தப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் ஒட்டுமொத்த செய்முறை, திறைசேரி சார்ப்பாக பங்குபற்றும் அங்கத்தவர் ஒருவருடனான நம்பிக்கை பொறுப்புச் சபையின் பொறுப்பாக காணப்படுவதுடன், அதற்கான ஏற்பாடுகள் நம்பிக்கை பொறுப்பு உறுதியின் மூலம் அவர்களுக்கு சாட்டப்பட்டிருந்தது. மேலும், நடுத்தீர்ப்பாளரின் அறிவுரையின் படியும் இதனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு இணங்க நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படாத செலவுகளுக்காக பொறுப்பான தரப்பினருக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.8 வரிப் பிரமாணங்களுக்கு இணக்கமின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2022 திசெம்பர் 23 திகதிய SEC/2022/E/03 இலக்கம் கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கையின் பந்தி 01 இன் படி 2023 ஜனவரி 01 திகதி முதல் செயற்படுமாறு விடுவிக்கப்பட்டிருந்த தொகையை தவிர இலங்கையின் மூலவளமொன்றுடனான கொடுப்பனவு மேற்கொள்ளும் ஆட்களின் தொழில் செய்பவர் அல்லாத வதியும் நபரொருவருக்கு சேவைக் கட்டணம் செலுத்தும் போது பஞ்சாங்க மாதம் ஒன்றிற்காக மொத்தக் கொடுப்பனவு ரூபா 100,000 தொகையை மிகைக்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த மொத்த கொடுப்பனவு மீது 5 சதவீதம் தடுத்து வைத்தல் வரி கழிக்க வேண்டியிருந்த போதிலும், நிதியத்தினால் சட்ட அலுவல்களுக்காக சட்ட நிபுணர் ஒருவருக்கு 06 மாத காலப் பகுதிக்காக ரூபா 1.08 மில்லியன் தொகை செலுத்தியிருந்த போதிலும், ஒரு மாத்தில் 100,000 தொகை	சட்ட வரைஞர் சேவையை பெற்றுக்கொண்ட பின்னர் அண்மித்த நாளொன்றில் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு மாதத்தினுள் மீண்டும் மீண்டும் அந்த சேவையை பெற்றுக்கொள்ளப்படும் என தீர்மாணிக்க முடியாமையால் பல தடவைகளுக்கான கட்டணங்களை தாமதமாக செலுத்தும் இயலுமையொன்று காணப்படவில்லை. அதன் காரணமாக செலுத்தப்பட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் வரி செலுத்த வேண்டிய பெறுமதி காணப்படாமையால் அது தொடர்பாக தேவைப்பாடொன்று உருவாகவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் தடுத்து வைத்தல் வரி கழித்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மிகைத்துள்ள கொடுப்பனவிற்காக தடுத்து வைத்தல் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	நிதியத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஆண்டின் போது போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 2.54 மில்லியன் தொகை மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 1.42 மில்லியன் தொகை செலுத்தியிருந்த போதிலும், 2023 மார்ச் 29 திகதிய SEC/2023/E/01 இலக்கம் கொண்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பண தனிநபர் வருமான வரி (APIT) கணிக்கும் போது அந்தக் கொடுப்பனவுகள் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	குறிப்பிட்ட மாதத்தினுள் போக்குவரத்துச் செலவுகளை மீளளிப்பு செய்த பின்னைய மாதங்களில் மேற்கொள்ளப்படும் காரணத்தினால் செலுத்தும் சந்தர்ப்பத்தில் வரையறுக்கப்பட்ட பெறுமதி மிகைத்திருக்காத காரணத்தினால் சீராக்கல் மேற்கொள்ளும் தேவைப்பாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுகின்ற அனைத்துக் கொடுப்பனவுகளும் உட்பட தனிநபர் வருமான வரி கணிக்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், சுற்றறிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக முறையான கவனத்துடனும் மற்றும் கண்காணிப்புடனும் செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 252.06 மில்லியனிற்கான மிகையயொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 332.69 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 80.63 மில்லியனிற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறி வருமானம் ரூபா 3.68 மில்லியன் தொகையினால் குறைவடைதல் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 52.09 மில்லியனினால் குறைவடைதல் மற்றும் அலோசனை சேவைகளுக்காக வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு ரூபா 2.34 மில்லியன் தொகையினால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

விடயம்	நடைமுறை ஆண்டின் மீதி (ரூபா)	முன்னைய ஆண்டின் மீதி (ரூபா)	வித்தியாசம் அதிகரித்தல் / (குறைவடைதல்) (ரூபா)	முரணின் சதவீதம் நுற்றிற்கு
வருமானங்கள்				
ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறி வருமானம்	9,779,425	13,455,756	(3,676,331)	27
நிலையான வைப்பு வட்டி வருமானம்	313,269,041	365,362,719	(52,093,678)	14
திறைசேரி உண்டியல் வட்டி வருமானம்	78,304,782	68,635,138	9,669,644	14
ஏனைய வருமானங்கள்	267,567	5,569,321	(5,301,754)	95
செலவுகள்				
ஆளுக்குரிய சம்பளங்கள்	70,500,898	63,728,178	6,772,720	11
போக்குவரத்து	7,201,350	6,514,435	686,915	11

செயற்பாட்டுக் கிரயம்	2,100,285	1,208,931	891,354	74
மூலோபாய மற்றும் கொள்கைகள்	3,181,565	2,657,913	523,652	20
ஆலோசனை	3,190,500	846,340	2,344,160	277
உட்கட்டமைப்பு வசதிகள்	7,433,953	6,433,830	1,000,123	16

2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) நிதியனத்தின் மீளாய்வாண்டின நடைமுறை விகிதாசாரம் 9:1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அந்த விகிதாசாரம் 6:1 ஆக காணப்பட்டது.

(ஆ) சொத்துக்கள் மீதான நலன்கள் விகிதாசாரம் முன்னைய ஆண்டின் போது 12 சதவீதமாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டில் அது 08 சதவீதம் வரை குறைவடைந்தமையால் நிதியத்தின் சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதியம் 1999 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2000 முதல் 2005 ஆண்டு வரையான காலப் பகுதியில் 04 சந்தர்ப்பங்களில் திறைச்சேரியில் இருந்து ரூபா 55 மில்லியன் மூலதன மானியம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும், வருடாந்த இலாபம் திறைச்சேரிக்கு அனுப்பும் செய்முறையொன்று ஏற்படுத்தியிருக்காததுடன், 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 949.79 மில்லியன் தொகைக்கான தடுத்து வைத்தல் உழைப்புக்களில் ரூபா 500 மில்லியன் தொகை “உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள்” எனப்படும் ஒதுக்கக் கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டு விளைவற்று காணப்பட்டது.	நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் பிரிவுகளின் பிரகாரம் இலாபம் உழைக்காத சேவை நிறுவனம் ஒன்றென கிடைத்திருந்த நிதியம் மற்றும் கிடைத்திருந்த வருமான பிணை வைப்பு வழங்குவதற்கான ஒதுக்கம் ஒன்றென பயன்படுத்துவதற்கும் அந்த ஒதுக்கத்தின் எந்தச் சந்தர்ப்பத்திலும் காணப்படுகின்ற பெறுமதியில் பத்து மடங்கு பிணைமுறி வழங்குவதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது. அதன் காரணமாக ஒதுக்கத்தை பேணுதல் மற்றும் விரிவாக்கல், நிறுவனத்தின் பொறுப்பொன்றாகும். மேலும், நிதி நிறுவனம் ஒன்றென சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் தமக்கென சொந்தமான இடமொன்று காணப்படாமையால் நம்பிக்கை பொறுப்புச் சபையின் ஏகோபித்த தீர்மானத்தின் படி சொத்துக்களின் ஒரு பகுதி அதற்காக ஏற்பாடுகள் என ஒதுக்கப்பட்டது.	நிதியம் முழுமையான அரச நிறுவனம் ஒன்றாக காணப்படுவதனால் நிதியத்தினால் உழைக்கப்பட்ட மிகை அல்லது மிகைகளின் பகுதியொன்று வருடாந்தம் திறைசேரிக்கு அனுப்புவதன் மூலம் பொருளாத அபிவிருத்தி நடவடிக்கை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	நிதியத்திற்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (MIS) வடிவமைத்து அபிவிருத்தி செய்வதற்காக நிதியத்தினால் 2015 ஆம் ஆண்டு இலங்கை டெலிகொம் நிறுவத்துடன ரூபா 2.98 மில்லியன் பெறுமதிக்கான உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் படி முதலாம் தவணைப் பணம் மற்றும் அபிவிருத்தி செய்த பின்னர் செலுத்த வேண்டிய இரண்டாம் தவணைப் பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 2.08 மில்லியன் தொகை எனப்படும் ஒப்பந்தப் பெறுமதியில் 70 சதவீதம், 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது குறிப்பிட்ட நிறுவத்திற்கு செலுத்தியிருந்ததுடன், அதனை நிதி நிலைமைக் கூற்றில் மென்பொருள் அபிவிருத்தி முற்பணத் தொகை என நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. பணம் செலுத்தப்பட்டு சுமார் 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 2025 மார்ச் 31 திகதி வரை இந்த முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விடயத்தை பூர்த்தி செய்துகொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு முடியாமல் இருந்தது.	முகாமைத்துவ தகவல் முறைமையின் (MIS) தேவைப்பாடு 2015 ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த போதிலும், அதுமுதல் அரச கொள்கைகள் திறைசேரிச் சுற்றறிக்கை CIDA நிபந்தனைகள் அடிக்கடி திருத்தப்பட்டதன் காரணமாக நேரடி தன்னியக்க முறைமையொன்று வடிவமைப்பதற்காக காலம் எடுத்ததுடன், 2025 ஆண்டிலும் நம்பிக்கை பொறுப்புச் சபை நடைமுறையிலுள்ள செய்முறைகளை திருத்துவதற்காக மற்றும் ஒப்பந்தக்காரர்களின் செயலாற்றுகை வரையறைகளை அரசினால் மாற்றுவதும் தேசிய பெறுகை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருந்த விபரக் குறிப்புக்கள் மீது சீராக்கல் மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட காலம் எடுக்கின்றதென தெளிவாகின்றது. இங்கே விஷேட விடயமாக காணப்படுவது இணங்கியிருந்த பெறுமதியினை தற்போதைய பெறுமதியுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த சதவீதமாக காணப்படுவதனால் அந்த விடயம் அவ்வாறு மேற்கொள்ளப்படல் நிதிசார் அனுகூலமாக காணப்படுகின்றது.	முகாமைத்துவ தகவல்கள் முறைமை தற்போதைய தேவைப்பாட்டிற்கு இணங்க வெற்றிகரமாக தயாரித்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	நிதியத்தின் ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறி வருமானம் (Bond and Guarantee Levy Income) கணிக்கும் போது 100,000 கிலோமீற்றர் பாதைக்காக ஒப்பந்தமுறியின் பெறுமதியின் 2 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் முறையே முற்பண ஒப்பந்தமுறி (Advance Bond) என மற்றும் செயலாற்றுகை முறிக்காக என (Performance Bond) அறவிடப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தமுறியின் கால நீடிப்பின் போது அறவீடு செய்யும் சேவைக் கட்டணம் முற்பண ஒப்பந்தமுறி மற்றும் செயலாற்றுகை ஒப்பந்த முறிக்காக முறையே 1.5 சதவீதம் மற்றும் 1.75 சதவீதமாக காணப்பட்ட போதிலும், இந்த கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக விஷேட முகாமைத்துவ அறிக்கையின் பிரதியொன்று	நம்பிக்கை பொறுப்பு சபை கொள்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஏனைய அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கட்டணங்கள் தீர்மானித்தல் உட்பட மற்றும் முழுமையான செயற்பாடுகள் மேல் மட்ட முகாமைத்துவத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அதன்படி, நியம குறைந்த கட்டணம் அல்லது ஆபத்தினை குறைக்கும் கட்டம் என ஒவ்வொரு செயற்திட்டத்திற்காகவும் வெவ்வேறாக கட்டணம் நிர்ணயித்தல், அந்த தீர்மானங்கள் பொதுவான அறிக்கையொன்றாக பராமரிக்கப்படுகின்றது.	நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறி வருமானம் கோப்புக்களில் ஆவணப்படுத்த வேண்டியதுடன், அந்த தகவல்கள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், கூட்ட அறிக்கைளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறி வருமானத்திற்கு காணப்படுகின்ற ஆபத்து நிலைமையின் படி ஒரு ரேட் ஒன்று மேலதிகமாக கூட்டப்பட்டிருந்ததுடன், இந்தப் பெறுமதி முகாமைத்துவத்தினால் காணப்படுகின்ற ஆபத்து நிலைமையை மதிப்பீடு செய்து ஒப்பந்தமுறி மற்றும் பிணைமுறி வருமானத்திற்கு கூட்டப்பட்டிருந்ததென அறிவித்திருந்த போதிலும், ஆபத்து நிலை மதிப்பீடு தொடர்பாக ஏதேனும் ஆவணங்கள் அல்லது கலந்துரையாடல் குறிப்புக்கள், ஒப்பந்தமுறி சேவைக் கட்டணத்திற்குரிய மூலவள ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	நிதியம் 2024 மற்றும் 2023 ஆண்டுகளின் போது பதவியணியினர் வைத்தியசாலை சிகிச்சைகள் மற்றும் திடீர் விபத்துக்கள் உட்பட மருத்துவச் செலவுகளின் மீளளிப்பு மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளை மீளளிப்பு செய்வதற்காக முறையே ரூபா 2.90 மில்லியன் தொகை மற்றும் ரூபா 5.51 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த மருத்துவச் செலவுகளின் மீளளிப்பு திறைசேரியின் அங்கீகாரத்துடன் முறையான செய்முறை ஒன்றின் கீழ் மேற்கொள்வதற்கு நிதியத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நம்பிக்கை பொறுப்பு உறுதியின் நடுத்தீர்ப்பாளரினால் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளின் படி நிறுவனத்தின் செய்முறை முறைப் பிரகாரம் மற்றும் தொடர்ச்சியாக பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றென திடீர் விபத்துக்கள் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பதவியணியினருக்கு நிறுவனத்தினால் உதவி வழங்கப்படுகின்றது.	நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மருத்துவ செலவு மீளளிப்பு உட்பட அதனுடன் சார்ந்த ஏனைய செலவுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(உ)	நிதியத்தின் செயற்பாடுத் தொழிற்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட்டு கால ரீதியாக நிருவாக சபைக்கு அறிவிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட வேண்டிய போதிலும் நிதியம் எச்சந்தர்ப்பத்திலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடாத்தியிருக்கவில்லை. அதேபோல், நிதியமைச்சில் அல்லது நிர்மாண வேலை அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்	நம்பிக்கை பொறுப்பு சபையின் நம்பிக்கை பொறுப்பு உறுதிக்கு இணங்கி மற்றும் காலத்திற்கு காலம் நடுத்தீர்ப்பாளரினால் வழங்கியிருந்த அறிவுரையின் மீது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்த தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுக் கூட்டங்கள் வருடாந்தம் பொருத்தமான விதத்தில் கூட்டங்கள் நடாத்தி நிறுவனத்தின் சேவை அலுவல்கள் மிகச் சிறந்த முறைப்பிரகாரம் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன்	நிருவாக சபையிடம் தேவையான உதவிகள் பெற்றுக்கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குழுக் கூட்டங்களில் பங்குபற்றியும் இருக்கவில்லை.	செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவனத்தினால் உண்டியல்கள், கழிவுகள் வழங்கி ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த தொகையில் சேவை வழங்குனர்களினால் உண்டியல்களுக்காக பணம் செலுத்தப்படாமையால் தீர்க்கபட முடியாமல் காணப்பட்ட பண மீதி ரூபா 10.30 மில்லியன் தொகையாகும். இந்த தொகை இரண்டு நிர்மாண வேலை நிறுவனங்களில் இருந்து 04 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவீடு செய்ய முடியாமல் காணப்படுகின்றது. 2024 ஆண்டின் போது இந்த முழுத்தொகையையும் நம்பிக்கை பொறுப்புச் சபையின் அங்கீகாரத்துடன் பதவழிக்கப்பட்டிருந்தது.	ஒப்பந்தக்காரர்கள் நிர்மாண வேலை உத்தரவாத நிதியத்திற்கு மற்றும் சேவையை வழங்குனர்களுக்கு தமது பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றாத காரணத்தினால் பிணைமுறிகள் வழங்கியிருந்த நிறுவனம் என இவ்வாறான நிலைமையொன்றுக்கு அளாவது இயல்பாக உள்ளது.	நட்டம் ஏற்படுவதை தடுத்துக்கொள்ள வேண்டியதுடன், பதிவழித்த பின்னரும் அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதியத்தின் செயற்பாட்டு அலுவல்கள் உச்சமட்ட செயற்திறனுடன் போலவே ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு நிருவாக சபையினால் நடவடிக்கை எடுப்பதன் மூலம் நட்டத்தை குறைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 கணக்ககளி பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணம் 877(2)(உ) படி நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் மும்மொழிகளிலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மேற்கூறிய அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2025 மார்ச் 31 திகதி அளவில், 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை திறைசேரி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும்,	நடுத்தீர்ப்பாளருக்கு காலாண்டு ரீதியாக நிதிச் செயலாற்றுகை, வருடாந்த பாதீடு, வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கை ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக அடுத்த வருடம் முதல் மாதத்தினுள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக முதல் முதல் தயாரிக்கப்பட்ட இரண்டு மொழி (சிங்களம் / ஆங்கிலம்) கணக்காய்விற்கு முன்னர் கணக்குகளுடன் அனுப்பப்படுகின்றது. அதன் பின்னர் அடுத்த அனைத்து அறிக்கைகளும் ஏனைய 02 மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. கணக்காய்வின் பின்னர் இறுதி நிதிக்கூற்றும் பின்னைய சந்தர்ப்பம்	சுற்றறிக்கை ஏற்பாடுகள் சரியாக ஆய்வு செய்து அதற்கு இணங்க செயற்பட வேண்டும்.

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர்களின் அறிக்கை அதற்கு உட்படுத்தியிருக்காததுடன், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதற்காக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.	ஒன்றில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அவ்வாறு தகவல் கிடைத்ததென உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.	

4.2 பாதீட்டுக் கட்டுபாடு

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) படி தொடர்ந்து வரும் ஆண்டிற்காக நம்பிக்கை பொறுப்புச் சபையினால் தயாரிக்கப்படுகின்ற பாதீடு திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக நடைமுறை ஆண்டு செப்தம்பர் 30 திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும், 2024 ஆண்டிற்கான நிதியத்தின் பாதீட்டிற்காக மேற்கூறியவாறு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.	பாதீட்டின் அனைத்து உள்ளடங்கிய விடயங்களையும் பகுப்பாய்வு செய்து சம்பிக்கை பொறுப்பாளர் சபையினால் அனுமதிக்கப்படுவதுடன், மேலதிக பரிந்துரைக்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்ட போதிலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள வரவு அல்லது செலவு திரண்ட நிதியத்திற்கு எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாமையால், குறித்துக்கொள்ளப்பட்டது என நம்பிக்கை பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகளின் படி நம்பிக்கை பொறுப்பு சபையினால் மாத்திரம் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் சரியாக ஆய்வு செய்து அதற்கு இணங்க செயற்பட வேண்டும்.